# ஹஜ்ஜின் வகைகளும் செய்ய வேண்டிய முறைகளும்

தொகுப்பு : மௌலவி S.யாஸிர் ஃபிர்தௌஸி
(அழைப்பாளர் அல் ஜுபைல் தஃவா நிலையம்)

| தமத்து | கிரான் | இஃப்ராத் |
|---|---|---|
| ↓<br>இஹ்ராம் அணிந்து<br>உம்ராவிற்காக நிய்யத் செய்தல்<br>لبّيك عمرةً<br>↓ | ↓<br>இஹ்ராம் அணிந்து<br>உம்ரா மற்றும் ஹஜ்ஜுக்காக<br>நிய்யத் செய்தல்<br>لبّيك عمرةً وحجّاً<br>↓ | ↓<br>இஹ்ராம் அணிந்து ஹஜ்ஜுக்காக<br>மட்டும் நிய்யத் செய்தல்<br>لبّيك حجّاً<br>↓ |
| தவாஃப்<br>↓ | தவாஃப்<br>↓ | தவாஃப்<br>↓ |
| ஸயீ<br>↓ | ஸயீ<br>↓ | ஸயீ<br>↓ |
| முழுமையாக தலைமுடி கத்தரித்தல்<br>↓ | ↓ | ↓ |
| இஹ்ராமிலிருந்து வெளியேறுதல் | தொடர்ந்து இஹ்ராமில் இருத்தல் | தொடர்ந்து இஹ்ராமில் இருத்தல் |
| *(யவ்முத்தர்வியா) துல் ஹஜ் பிறை 8 - ல் ளுஹருக்கு முன்* | | |
| இஹ்ராம் அணிந்து<br>ஹஜ்ஜுக்காக நிய்யத் செய்தல்<br>↓ | ↓<br>↓ | ↓<br>↓ |
| மினாவுக்குப் புறப்படுதல் | மினாவுக்குப் புறப்படுதல் | மினாவுக்குப் புறப்படுதல் |
| *மினாவில்தங்கி இருக்கும் காலமெல்லாம் (பிறை 8, 10, 11,12,13 ) ஐந்து நேரத் தொழுகையையும் அதன் உரிய நேரத்தில் தொழுவதுடன் 4 ரக்கஅத் தொழுகைகளை 2 ரக்க அத்தாக சுருக்கித்தொழவேண்டும்.* | | |
| *துல் ஹஜ் பிறை 9 - ல் சூரிய உதயத்திற்குப் பின்னர்* | | |
| அரஃபாவிற்கு செல்லுதல் | அரஃபாவிற்கு செல்லுதல் | அரஃபாவிற்கு செல்லுதல் |
| *அரஃபாவில் ளுஹர் அஸர் ஆகிய தொழுகைகளை 2 ரக்கஅத்தாக சுருக்கி ளுஹருடைய நேரத்தில் தொழவேண்டும்.* | | |
| *துல் ஹஜ் பிறை 9 - ல் சூரிய மறைவிற்குப் பின்னர்* | | |
| முஸ்தலிஃபாவிற்குப் புறப்படுதல் | முஸ்தலிஃபாவிற்குப் புறப்படுதல் | முஸ்தலிஃபாவிற்குப் புறப்படுதல் |
| *முஸ்தலிஃபாவில் மஃரிப்(3 ரக்கஅத்) மற்றும் இஷா (2 ரக்கஅத்) தொழுகையை சேர்த்து தொழவேண்டும். பின்னர் நன்றாக தூங்கிய பின்னர் ஃபஜ்ர் தொழுகையை தொழவேண்டும்.* | | |

| தமத்து | கிரான் | இஃப்ராத் |
|---|---|---|
| *துல் ஹஜ் 10 ஃபஜ்ர் தொழுகைக்குப் பின் சூரிய உதயத்திற்கு முன்* | | |
| மினாவுக்குச் செல்லுதல் | மினாவுக்குச் செல்லுதல் | மினாவுக்குச் செல்லுதல் |
| *துல் ஹஜ் பிறை 10 (பெருநாள் தினத்தன்று)* | | |
| ஜம்ரத் அல் குப்ரா<br>(அல் அகபா)வில் கல் எறிதல்<br>7சிறிய கற்களை எறிதல் | ஜம்ரத் அல் குப்ரா<br>(அல் அகபா)வில் கல் எறிதல்<br>7சிறிய கற்களை எறிதல் | ஜம்ரத் அல் குப்ரா<br>(அல் அகபா)வில் கல் எறிதல்<br>7சிறிய கற்களை எறிதல் |
| ↓ | ↓ | ↓ |
| குர்பானி | குர்பானி | |
| ↓ | ↓ | ↓ |
| தலை முடி முழுமையாக<br>மழித்தல் அல்லது முழுமையாக<br>கத்தரித்தல் | தலை முடி முழுமையாக<br>மழித்தல் அல்லது முழுமையாக<br>கத்தரித்தல் | தலை முடி முழுமையாக<br>மழித்தல் அல்லது முழுமையாக<br>கத்தரித்தல் |
| ↓ | ↓ | ↓ |
| முதலாவது இஹ்ராமிலிருந்து<br>வெளியேறுதல் - விடுபடுதல்<br>மனைவியோடு இணைவதைத்<br>தவிர இஹ்ராமில் தடுக்கப்பட்ட<br>அனைத்தும் ஹலாலாகும் | முதலாவது இஹ்ராமிலிருந்து<br>வெளியேறுதல் - விடுபடுதல்<br>மனைவியோடு இணைவதைத்<br>தவிர இஹ்ராமில் தடுக்கப்பட்ட<br>அனைத்தும் ஹலாலாகும் | முதலாவது இஹ்ராமிலிருந்து<br>வெளியேறுதல் - விடுபடுதல்<br>மனைவியோடு இணைவதைத்<br>தவிர இஹ்ராமில் தடுக்கப்பட்ட<br>அனைத்தும் ஹலாலாகும் |
| ↓ | ↓ | ↓ |
| தவாஃப் அல் இபாஃளா | தவாஃப் அல் இபாஃளா | தவாஃப் அல் இபாஃளா |
| ↓ | ↓ | ↓ |
| ஸயீ | | |
| ↓ | ↓ | ↓ |
| இஹ்ராமிலிருந்து பூரணமாக<br>வெளியேறுதல் - மனைவியோடு<br>இணைதல் உட்பட<br>இஹ்ராமிற்காகத் தடுக்கப்பட்ட<br>அனைத்தும் ஹலாலாகும் | இஹ்ராமிலிருந்து பூரணமாக<br>வெளியேறுதல் - மனைவியோடு<br>இணைதல் உட்பட<br>இஹ்ராமிற்காகத் தடுக்கப்பட்ட<br>அனைத்தும் ஹலாலாகும் | இஹ்ராமிலிருந்து பூரணமாக<br>வெளியேறுதல் - மனைவியோடு<br>இணைதல் உட்பட<br>இஹ்ராமிற்காகத் தடுக்கப்பட்ட<br>அனைத்தும் ஹலாலாகும் |

*துல் ஹஜ் 10 வது நாள் மேலே கூறப்பட்ட கல் எறிதல், குர்பானி கொடுத்தல், முடியை முழுமையாக மழித்தல் அல்லது முழுமையாக கத்தரித்தல், தவாஃபுல் இஃபாழா செய்வது ஆகிய நான்கு செயல்களையும் வரிசையாக செய்ய இயலவில்லை என்றால் முன் பின்னாக செய்யவும் அனுமதி உள்ளது.*

ஹஜ் பிறை 11, 12, 13 (அய்யாமுத்தஷ்ரீக் ) ஒவ்வொரு நாளும் சூரியன் சாய்ந்ததிலிருந்து (லுஹருடைய நேரத்திலிருந்து) ஒவ்வொரு ஜம்ராத்க்களிலும் 7 சிறிய கற்களை எறிய வேண்டும்.

| தமத்து | கிரான் | இஃப்ராத் |
|---|---|---|
| ↓<br>ஜம்ரத் அஸ்ஸுஃக் ராவில<br>(முதலாவது) கல்லெறிதல்<br>(மினா மஸ்ஜித் "கைப்"<br>அருகில் உள்ளது).<br>பின்<br>ஜம்ரத் அல்வுஸ்தாவில்<br>கல்லெறிதல்<br>(நடுவில் உள்ளது)<br>பின்<br>ஜம்ரத் அல் அகபாவில்<br>கல்லெறிதல் (இறுதியில் உள்ளது) | ↓<br>ஜம்ரத் அஸ்ஸுஃக் ராவில<br>(முதலாவது) கல்லெறிதல்<br>(மினா மஸ்ஜித் "கைப்"<br>அருகில் உள்ளது).<br>பின்<br>ஜம்ரத் அல்வுஸ்தாவில்<br>கல்லெறிதல்<br>(நடுவில் உள்ளது)<br>பின்<br>ஜம்ரத் அல் அகபாவில்<br>கல்லெறிதல் (இறுதியில் உள்ளது) | ↓<br>ஜம்ரத் அஸ்ஸுஃக் ராவில<br>(முதலாவது) கல்லெறிதல்<br>(மினா மஸ்ஜித் "கைப்"<br>அருகில் உள்ளது).<br>பின்<br>ஜம்ரத் அல்வுஸ்தாவில்<br>கல்லெறிதல்<br>(நடுவில் உள்ளது)<br>பின்<br>ஜம்ரத் அல் அகபாவில்<br>கல்லெறிதல் (இறுதியில் உள்ளது) |

ஜம்ரதுல் அகபாவை தவிர்த்து முதல் இரண்டு ஜம்ராக்களிலும் கல்லெறிந்து விட்டு நீண்ட நேரம் நின்று து ஆ செய்வது நபிவழியாகும்.

துல் ஹஜ் பிறை 12 ஆம் நாளே தனது இருப்பிடத்திற்கு செல்ல விரும்பும் ஒருவர் 3 ஜம்ராக்களிலும் கல்லடித்துவிட்டு சூரியன் மறைவதற்கு முன் மினாவை விட்டு வெளியேற வேண்டும்.

## புனித மக்காவிலிருந்து புறப்படும் சமயம்

| தவாஃப் அல் விதா | தவாஃப் அல் விதா | தவாஃப் அல் விதா |
|---|---|---|

அரஃபா , மினா... மக்காவில் தங்கி இருக்கும் நாட்களில் பொருட்களை வாங்குவதிலும் இடங்களை சுற்றிப் பார்பதிலும் அதிகமான நேரங்களை வீணடிக்காமல் திக்ரு ,து ஆ , இஸ்திஃபார், குர் ஆன் ஓதுவது, நஃபிலான வணக்க வழிபாடுகள் என்று நேரத்தை பயனுள்ள வழியில் செலவிட வேண்டும். குறிப்பாக முஸ்லீம்களுக்கிடையேயான உலகளாவிய ஒற்றுமை, கொள்கை பிடிப்பு, முஸ்லீம்களின் உயிர், உடமை, கௌரவப் பாதுகாப்பு , எதிரிகளின் சூழ்ச்சிகள் முறியடிப்பு , சமுதாய சீர்திருத்தம் , பொது நல காரியங்களை பற்றி அல்லாஹ்விடம் முறையிடுங்கள். அனைவருக்கும் ஹஜ் மற்றும் உம்ராவின் பாக்கியம் கிடைக்க து ஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் நமது ஹஜ்ஜை ஏற்று அதிலுள்ள குறைபாடுகளையும் ஏனைய அனைத்து பாவங்களையும் மன்னித்து அருள் புரிவானாக !